DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS. No. 9 /2022**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | பாலாஜி |
| Father's / Husband's Name | : | மணி |
| Age | : | 31 |
| Religion | : | இந்து |
| Calling | : | Army |
| Caste | : | வன்னியர் |
| Village | : | பரதராமி |
| Date | : | 01.08.2022 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. வழக்கு விசாரணையில் எனது சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை தான். அதைப் படித்துப்பார்த்துதான் கையெழுத்துப்போட்டேன். 04.08.2021 தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்த அசல் கிரைய ஒப்பந்த பத்திரம் **வா.சா.ஆ.1**. அதே ஒப்பந்தத்தில் 3 தாளின் பின்பக்கத்தில் 04.09.2021 தேதியில் பிரதிவாதி என்னிடம் இருந்து ரூ.8,00,000/= கூடுதல் முன்பணமாக பெற்றுகொண்டு ஏற்படுத்திக்கொடுத்த மேல் எழுத்து **வா.சா.ஆ.2**. 19.04.2017 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்திற்கான அசல் செட்டில் மெண்ட் பத்திரம் **வா.சா.ஆ.3**. 02.11.2021 தேதியிட்ட பிரதிவாதி பெயருக்கு ரெப்கோ ஹோம் பைனான்ஸ் நிறுவனம் எழுதிக்கொடுத்த டிஸ்சார்ஜ் ரசீது **வா.சா.ஆ.4.** பிரதிவாதி தாவா சொத்தில் வீடு கட்டியதற்காக வழங்கப்பட்ட 24.08.2017 தேதியிட்ட கட்டிடம் கட்ட உத்தரவு வரைபடம் **வா.சா.ஆ.5**. 07.09.2021 தேதியிட்ட கட்டிடப்பொறியாளரின் அறிக்கை மற்றும் ஆவணங்களுடன்

**வா.சா.ஆ.6.** 13.01.2022 தேதியிட்ட தாவா சொத்து குறித்த வழக்கறிஞர் சட்ட கருத்துரை **வா.சா.ஆ.7**. 03.02.2022 தேதியிட்ட விளாப்பாக்கம் பாரத ஸ்டேட் பாங்க் வழங்கிய Loan Arrangement கடிதம் **வா.சா.ஆ.8.** பிரதிவாதி பெயருக்கு 05.02.2022 தேதியில் ரூ.16,00,000/=த்திற்கு எடுக்கப்பட்ட வரைவோலையின் நகல் **வா.சா.ஆ.9**. (அசல் தாக்கல் செய்யாததற்கான காரணம் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது ஏற்றுக்கொள்ளகூடியதாக உள்ளதால் சட்டப்படியான நிபந்தனைக்குட்பட்டு வா.சா.ஆ.9 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). 11.02.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீதுகளுடன் **வா.சா.ஆ.10.** அந்த வழக்கறிவிப்பை பிரதிவாதி மற்றும் ஆற்காடு சார்பதிவாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை(எண்ணிக்கை 2) **வா.சா.ஆ.11**. 13.03.2022 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.12.** 08.04.2022 அன்று சார்பதிவாளர் ஆற்காடு அவர்களுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பின் நகல் ஆவணம் **வா.சா.ஆ.13.** அதை சார்பதிவாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.14.** 06.10.2021 தேதியிட்ட ரெப்கோ ஹோம் பைனான்ஸ் நிறுவனம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கடனை அடைத்ததற்கான கடிதத்தின் அசல் மற்றும் பணம் செலுத்தியதற்கான கணக்குகளுடன் கூடியது **வா.சா.ஆ.15**. நான் விளாப்பாக்கம் விளாப்பாக்கம் பாரத ஸ்டேட் பாங்க் வங்கியில் கணக்கு வைத்ததற்கான சேமிப்பு கணக்கின் கணக்கு பட்டியல் **வா.சா.ஆ.16.** தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH